


பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளுக்கிடையே நடத்தப்பட்ட பேச்சுப் போட்டிகளில் இறுதிச்சுற்றில் வெற்றி பெற்று கல்விச் சுற்றுலாவாக லண்டன் அழைத்து செல்லப்பட உள்ள சென்னைப் பள்ளி மாணவ/மாணவியர்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்களை இன்று **(19.11.2019)** ரிப்பன் மாளிகையில் வளாகத்தில் உள்ள அம்மா மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில், துணை ஆணையாளர் (கல்வி) (பொ) டாக்டர் ஆல்பி ஜான் வர்கீஷ், இ.ஆ.ப., பிரிட்டிஷ் கவுன்சில் சொசைட்டி உதவி இயக்குநர் திருமதி தீபா சௌந்தரராஜன், சென்னை கிழக்கு ரோட்டரி கிளப் தலைவர் திரு.டி.ஆர்.கோபால கிருஷ்ணன், விங்ஸ் டு ஃபிளை தலைவர் சௌமியா ஸ்கந்தன், கல்வி அலுவலர், கூடுதல் கல்வி அலுவலர், உதவி கல்வி அலுவலர்கள், சென்னை கிழக்கு ரோட்டரி கிளப் உறுப்பினர்கள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.